JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | **198/2014** |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | **P.W. 4** | Prosecution /Defence / Court | |
| Name | **Saravanan** | Village | Thalayampalayam, Seenapuram |
| Father's Name | **Kaliyappan** | Taluk | Perundurai |
| | | Age | |

**Accused present**.

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of **Date 07.10.2025.**

**முதல் விசாரணை**

**1)** நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு தறி ஓட்டும் வேலை செய்து வருகிறேன். 10.05.2014ம் தேதி காலை சுமார் 6.00 – 6.30 மணி இருக்கும். என்னுடைய கம்பெனியில் இருந்து சீனாபுரத்தில் உள்ள பேக்கரிக்கு டீ சாப்பிடுவதற்காக நானும், அ.சா.2 சுரேஷ் சென்ற போது எங்களை ஓவர்டேக் செய்து எங்கள் முன்னால் சென்ற ஒரு வாகனத்தையும் ஓவர்டேக் செய்து சென்ற போது எதிர்திசையில் சென்ற லாரி மீது மோதியதில் 4 – 5 பேருக்கு பலத்த காயம் ஏற்பட்டு விட்டது. நீண்ட நாட்கள் ஆகிவிட்டதால் வாகன ஓட்டுநர்களை தற்போது அடையாளம் காண இயலாது.

2. விபத்தில் காயம்பட்ட சரஸ்வதி மற்றும் 4 –5 நபர்கள் 108 ஆம்புலன்ஸ் வரவழைத்து 108 ஆம்புலன்ஸ்ல் அனுப்பி வைத்தோம். அதில் ஒருவர் இறந்து போய்விட்டதாக நான் கேள்விபட்டேன். என்னை பெருந்துறை காவல் நிலைய உதவி ஆய்வாளர் அவர்கள் விசாரிக்க எனக்கு தெரிந்த விவரங்களை கூறினேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**1)** நானும், சுரேஷ்ம் யார் தறிப்பட்டறையில் வேலை செய்கிறோம் என்றால் N.R.ராஜு என்பவர் தறிப்பட்டறையில் வேலை செய்கிறோம். சம்பவ இடத்திலிருந்து தறிப்பட்டறை மேற்கே சுமார் 500 அடி இருக்கும் என்றால் சரிதான். நாங்கள் இருவரும் டீ குடிப்பதற்காக மேற்கே இருந்து கிழக்கே வந்து கொண்டிருந்தோம் என்றால் சரிதான். நானும், சுரேஷ்ம் டீ குடிப்பதற்காக பேக்கரி வந்த விவரத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் ஞாபகம் இல்லை. நானும், சுரேஷ்ம் தறிப்பட்டறைக்கு வேலைக்கு செல்வதற்காக சென்றோம் என்று சொல்லவில்லை என்றால் சரிதான்.

2. விபத்தை ஏற்படுத்திய வாகனத்தின் பதிவு எண் தெரியாது என்றால் சரிதான். போலீசார் விசாரிக்கும் போது வாகனத்தின் பதிவு எண் சொல்லவில்லை என்றால் சரிதான். நாங்கள் இருவரும் டீ குடிக்க சைக்கிளில் சென்றோம். அ.சா.2 சுரேஷ் சைக்கிளை ஓட்ட நான் பின்னால் அமர்ந்து சென்றேன். லாரிக்கு பின்னால் நானும், சுரேஷ்ம் மேற்கு நோக்கி சைக்கிளில் சென்று கொண்டு இருந்தோம் என்றால் சரியல்ல. விபத்து நடந்தவுடன் லாரி டிரைவர் ஓடி விட்டார் என்றால் சரிதான். முன்னால் சென்ற வாகனம் லாரியா, பஸ்ஸா காரா என்று தெரியாது என்றால் சரிதான். விபத்து நடந்தவுடன் ¼ மணி நேரத்தில் பெண் காவல் உதவி ஆய்வாளர் அங்கு வந்து விட்டார் என்றால் சரிதான். அவர் தான் காயம் பட்ட நபர்கள் ஆம்புலன்ஸ் மூலும் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார் என்றால் சரிதான். அங்கிருந்த ஆமனி வேன், லாரியை புகைப்படம் எடுத்துக் கொண்டார்கள் என்றால் சரிதான். சம்பவ இடத்தை பார்த்து எழுதிக் கொண்டு என்னிடமும், அ.சா.2 சுரேஷிடமும் கையெழுத்து வாங்கிக் கொண்டார்கள் என்றால் சரிதான். பின்னிட்டு லாரியையும், ஆம்னி வேனையும் காவல் நிலையத்திற்கு எடுத்து சென்று விட்டார்கள் என்றால் சரிதான். ஒரு அரை மணி நேரத்தில் காவல் நிலையத்திற்கு எடுத்து சென்று விட்டார்கள் என்றால் சரிதான். எடுத்து சென்ற பின்னிட்டு போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். அதன் பிறகு நாங்கள் தறிப்பட்டறைக்கு சென்று விட்டோம் என்றால் சரிதான். நானும், அ.சா.2 சுரேஷ்ம் சைக்கிளில் டீ குடிக்க வந்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அங்கிருந்த மளிகை கடைக்காரர் மற்றும் பேக்கரி கடைக்கார்ருக்கு சம்பவம் பற்றி தெரியும் என்றால் சரிதான். அப்போதே போலீசார் அவர்களிடம் விசாரித்து கையெழுத்து வாங்கிக் கொண்டார்கள் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை**

**இல்லை.**

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை